**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**S.C No. 228 /2009**

2023– வருடம் பிப்ரவரி மாதம் 23–ம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ் செல்வன் (அ.சா.–3 ) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : | | வயது | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலுகா | : | | நாள் | : 23.2.2023 |
| மாவட்டம் | : | | | |

1–ம் எதிரி – நடராஜன் ஆஜர்.

2–ம் எதிரி – குமார் என்ற கிருஷ்ண குமார் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

நான் அக்கமநாயக்கன் புதூரில் குடியிருந்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 30.4.2004–ம் தேதியன்று பகல் 12 மணிக்கு பெத்தநாயக்கன்பட்டி பிரிவு அருகில் போலீஸ் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது போலீசார் இந்த வழக்கின் சம்பவயிடத்தை என் முன்னிலையிலும் சாட்சி ராதாகிருஷ்ணன் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். அந்த பார்வை மகஜர் அ.சா.–2. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை :

30.4.2004 தேதி போலீசார் என்னை விசாரித்தார்கள். நாங்கள் அந்த பக்கம் ஆட்கள் வேலை செய்து கொண்டிருப்பதை பார்ப்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற போது சம்பவ இடத்திற்கு சென்றோம். ஆய்வாளர் கர்ணன் அங்கு விசாரித்துக் கொண்டிருந்தார். பெத்தநாயக்கன்பட்டி பிரிவுக்கு கீழ்புறம் சம்பவயிடம் ஆகும். அந்த இடம் மெயின் ரோடு என்பதால் வண்டி வாகன போக்குவரத்து எப்போதும் இருக்கும் என்றால் சரிதான். 30.4.2004 தேதி நான் காண்ட்ராக்ட் வேலை செய்து கொண்டிருந்தேன். சம்பவயிடத்தை எங்கள் முன்பு பார்வையிட்டு வரைபடம் தயார் செய்திருந்ததாக பார்வை மகஜரில் எழுதப்பட்டிருந்தது. வேறு எந்த விபரங்களும் அதில் இல்லை. நான் காண்ட்ராக்டராக இருப்பதால் பழனி தாலுகா காவல் நிலையத்திற்கு அடிக்கடி செல்வேன் என்றும் அந்த வகையில் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டு தற்போது சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால்

சரியல்ல. பார்வை மகஜரில் சாட்சி கையெழுத்து போட்ட காலக்கட்டத்தில் நான் எந்த அரசியல் கட்சியிலும் இல்லை. சம்பவ காலக் கட்டத்தில் நான் திமுக கட்சி சார்பாக ஊராட்சி மன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றேன் என்றால் சரியல்ல. சுயேட்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்றேன். நான் எங்கள் ஊரின் திமுக கிளைச் செயலாளர் என்றால் சரியல்ல. என் அப்பா தான் அந்தப் பொறுப்பில் இருந்தார். என் அப்பா அவ்வாறு அரசியல் கட்சி பொறுப்பில் இருந்ததாலும் நான் ஊராட்சி மன்ற உறுப்பினராக இருந்ததாலும் காவல் நிலையத்திற்கு போய் பார்வை மகஜரில் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அக்கமநாயக்கன்புதூரை சேர்ந்தவர் என்பதால் சம்பவயிடத்திற்கு அன்றைய தினம் சென்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR Date: 2023.02.23 14:48:39 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.